### தூத்துக்குடியில்

# மீனவர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தலைமையில்! அமைச்சர் கீதா ஜீவன் தொடங்கி வைத்தார்!



*தூத்துக்குடி, ஜன. 15 -* கழகத் தலைவரின் நல்லாட்சியில் மீனவர் நலன் நாடும் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மீனவ மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைந்து, அவர்களின் வாழ்கை தரமும் உயர்ந்துள்ளது என கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் தமிழகம் முழுவதும் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த உத்தரவிட்டிருந்தார். அதன்படி தமிழகம் முழுவதும் 100 இடங்களில் இதற்கென சிறப்புமுகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் 4 இடங்களில் இந்த சிறப்பு முகாம்கள் நடைபெற்றன.

தூத்துக்குடியில் நடைபெற்ற முகாமிற்கு வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன் தலைமை வகித்தார். முகாமை தொடக்கி வைத்து அமைச்சர் கீதா ஜீவன் பேசுகையில், “மீனவர்கள், மீன்வலை பின்னுவோர், ஏலம் விடுவோர், தலைசுமை வியாபாரம் செய்வோர், பதப்படுத்தும் பணி செய்வோர் என 15க்கும் அதிகமான பணிகளை செய்வோர் இந்த வாரியத்தில் உறுப்பினர் ஆகலாம். கழக ஆட்சியில் மீனவர் நலன் நாடும் ஏராளமான திட்டங்கள் வந்துள்ளன.

தூத்துக்குடி துறைமுகம், திரேஸ்புரம் உள்ளிட்ட பகுதிகளில் பல வளர்ச்சிப் பணிகள் முடிந்துள்ளன. தொடர்ந்து பல்வேறு கூடுதல் பணிகள் நடைபெற்றும் வருகிறது.”என்றார்.

**மீனவர் நலன்நாடும் தி.மு.கழகம்**

தொடர்ந்து பேசிய கழக மீனவர் அணி செயலாளரும், மீனவர் நலவாரியத்தலைவருமான ஜோசப் ஸ்டாலின் பேசுகையில், “கடந்த 2007 ஆம் ஆண்டு, முன்னாள் முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் மீனவர் நல வாரியம் உருவாக்கப்பட்டது. பத்து ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில், முடக்கப்பட்ட வாரியத்திற்கு புத்துயிர் கொடுத்து நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு கழகத்தலைவர், முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

தி.மு.கழகம் எப்போதும் மீனவர் நலன் நாடும் இயக்கம். அதனால் தான் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 5000 ரூபாயில் இருந்து, 8000 ரூபாயாக கழக ஆட்சியில், முதல்வர் அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளது.

இன்னொன்று இப்போது நலவாரிய உறுப்பினர் சேர்க்கை தூத்துக்குடியில் நடக்கிறது.

ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது உங்களுக்கு துணையாக நின்றவர்கள் தி.மு.க.தான் என்பதும் உங்களுக்குத் தெரியும். துப்பாக்கிசூடு சம்பவத்தை டிவியில் பார்த்து தெரிந்து கொண்டேன் என்று சொன்னவர்கள் யார் என்று உங்களுக்குத் தெரியும். இப்போது புதிதாக ஒரு நடிகர் புறப்பட்டு வந்துள்ளார்.

மீனவர்கள் அவருக்கு ஓட்டுப் போடுவார்கள் என்று அவரது கட்சியினரே வதந்தியைப் பரப்புகிறார்கள். மீனவர்களை ஓட்டு வங்கியாக மட்டுமே பார்க்கும் அந்த நடிகர் கட்சிக்கு நாம் பாடம் புகட்ட வேண்டும்.

மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர் ஆனவர்களுக்கு ஏராளமான நன்மைகள் உண்டு. விபத்து ஏற்பட்டு மீனவர் நலவாரிய உறுப்பினர் இறந்து விட்டால் 2 லட்சம் ரூபாய் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும்.

இயற்கை மரணத்திற்கும் கூட 25000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதே போல், மீனவர் நல வாரிய உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்விக்கு நிதி உதவி, திருமணத்திற்கு நிதி உதவி, மகப்பேறு கால நிவாரணம் என பல நிதி உதவி, நிவாரணத் திட்டங்கள் உள்ளன.

**மீனவர்களுக்கு அதிக திட்டங்கள்**

மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகையை 1 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயிலிருந்து, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது கழகத் தலைவரின் பொற்கால ஆட்சி தான். இப்படி மீனவர் நலன் நாடும்வகையில் கழக ஆட்சியில் ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதையெல்லாம் மீனவ சொந்தங்களாகிய நீங்கள், உங்கள் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள அனைத்து மீனவர்கள் மத்தியிலும் கொண்டு செல்ல வேண்டும். மீனவ மக்களுக்கு அரணாக இருக்கும் கழக ஆட்சி மீண்டும் அமைய, திராவிட மாடல் 2.0 அமைந்திட ஒவ்வொரு மீனவரின் பங்களிப்பும் இருக்க வேண்டும்.”என்று கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.1.2026) முகாம் அலுவலகத்தில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், 2025–ஆம் ஆண்டுக்கான “பேரறிஞர் அண்ணா விருது” அறிவித்தமைக்காக சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரன் முழு உருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபத்தை கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க ஜனவரி 17ஆம் தேதி பரமக்குடி வருவதை முன்னிட்டு தியாகி இமானுவேல் சேகரன் மணிமண்டபத்தை இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர்ராஜன் உட்பட அரசு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.



முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிடப் பொங்கலை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில், தைத்திருநாள் புத்தாண்டு,சமத்துவப் பொங்கலிடும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்வில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர் கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த்,மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, சுரேஷ்,கிரிஜா குமார், தினேஷ், சுதா மூர்த்தி, அன்டன் செல்லதுரை, துபாய் சாகுல் ஹமீது, சையது முகைதீன், சங்கர், சாமுவேல், அன்பழகன், பிரான்சிஸ்,ரேவதி பிரபு,மகேஸ்வரி,கதீஜா இக்லாம் பாசிலா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.


